24 கிலோ அரிசி என்று குறைத்து இருக்கிறோம். உணவுக்கு வேலை திட்டத்திற்காக மத்திய அரசு ஒதுக்கி வந்த அரிசிக்குப் பதிலாக, எங்களிடத்தில் அரிசி ஸ்டாக் இல்லாததால் பணம் கொடுத்து விடுகிறோம், அந்த மாநிலத்தில் உள்ள உணவுப் பொருள்களை வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் கீழும் அரிசி வராததால் இரண்டாவது கருத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தற்போது பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்க முடியாது.

திரு. என். வி. என். சோமு : தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானமும் எடுத்து கொள்ளப்பட்டு விவாதத்தில் இருக்கிற நேரத்தில் 10.15 மணிக்கு வந்து விட்டு, உடனே ஒரு பிரச்னையை அனுமதிக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அமைதியாகப் பேரவையை நடத்துவதற்கு ஒத்துழைக்க வில்லை என்றால், நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) பவானி சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்களது வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, "பவானியிலுள்ள சமுக்காளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1981 ஏப்ரல் 6] திரு. எஸ். இராகவானந்தம்

அறிக்கை

பெரியார் மாவட்டம் பவானி வட்டாரத்திலுள்ள கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். அந்தப் பகுதியில் சுமார் 150 ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் ஏறக்குறைய 10,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் காரணம் காட்டி, அடிப்படை ஊதியத்தில் அதிகப்படியாக 25 சதவீதம் உயர்வு கோரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இத் தொழிற்தகராறில் சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளார். நிர்வாகத்தினர், பவானி வட்டார கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்போர் மற்றும் வியாபாரிகள் சங்கம் மூலமாகவும், தொழிலாளர்கள் ஏ. ஐ. டி. யூ. சி., அண்ணா தொழிற்சங்கப் பேரவை, தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை மற்றும் சி. ஐ. டி. யூ. ஆகியவற்றுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் மூலமாகவும் இத்தொழிற்தகராறு குறித்த சமரசப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்கிறார்கள்.

கோவை தொழிலாளர் துறை ஆணையர் முன், கடந்த 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் அன்று நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தைகளின்போது நிர்வாகத்தினர் 10 சதவீதம் ஊதிய உயர்வு கொடுக்க முன் வந்தனர். இதனை தொழிலாளர்கள் ஏற்க மறுத்துவிட்டனர். எனவே ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை, பேச்சு வார்த்தைகள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இடையில் நிர்வாகத்தினருக்கும், ஏ. ஐ. டி. யூ. சி. நீங்கலாக மற்ற தொழிற் சங்கங்களும் நடத்திக் கொண்ட நேரடிப் பேச்சு வார்த்தைகளின் விளைவால் 15 சதவீதம் ஊதிய உயர்வுக்கு இருதரப்பாரும் ஒப்புக் கொண்டு இரண்டு வருட காலத்துக்கு ஒப்பந்தமிட்டுக்கொள்ள சம்மதித்து, இதன் அடிப்படையில் தொழிற் தகராறு சட்டம், 1947 பிரிவு 12 (3)-ன் கீழ் ஒப்பந்தம் கையொப்பமிட கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று ஆஜரான ர்கள். ஏ.ஐ. டி. யூ. சி. யுடன் சேர்ந்த தொழிற்சங்கம் கள் ஒப்பந்தத்தில் விடுபட்டுப் போகும் நிலையிருந்தால் கோவை தொழிலாளர் துறை ஆணையர் 12 (3) ஒப்பந்தம் கையொப்பமிடுவதை ஒத்திவைத்து இரு தரப்பினரையும் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாளன்று பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார். வேலை நிறுத்தம் தொடர்கிறது. நிலைமை சீராக உள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 17 ஆம் நாள் நடைபெற்ற ஒரு ஒப்பந்தத்தில் 1980 ஆம் ஆண்டு தீபாவளிக்குப்பின் கூலி என்றும் அதற்கு பிறகு பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்றும் ஈரோடு தொழிலாளர் நல அதிகாரி முன்னிலையிலும், ஈரோடு பெரியார் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி முன்னிலையிலும் கோவை வட்டாச்சியர் முன்னிலையிலும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தீபாவளிக்கு முன்னால் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, தீர்வு கண்டிருக்க வேண்டும் அப்படி தீர்வு காணத் தவறிவிட்டதால் பவானி வட்டத்தில் கைத்தறி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் பிறகு தொழிலாளர்கள் 25 சதவீதம் கூலி உயர்வு வேண்டுமென்று கேட்டு, முதலாளிகள் 10 சதவீதம் அதிகமாக கொடுக்கமாட்டேன் என்று கூறி இடையிலே தொழிலாளர் நல அமைச்சர் 15 சதவீதம் கூலி உயர்வு என்று பேசித் தீர்க்கப்பட்டு இருப்பினும் அந்த உயர்வு இரண்டு ஆண்டுக் காலத்திற்கு என்று ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று உரிமையாளர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இன்று ஏறிவருகின்ற விலைவாசி காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு என்பது சாத்தியமில்லை என்று சொல்லி, தொழிலாளர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே 10,000, தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த வேலை நிறுத்தத்தை முடிவாக்க அரசுத் தரப்பில் சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரச்சனைகள் எல்லாம் மனதிலே கொள்ளப்பட்டு, இன்றையதினம் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் அன்று கோவை தொழிலாளர் துணை ஆணையர் முன்னால் பேச்சுவார்த்தை நடக்க உள்ளது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, பவானியில் நடைபெற்று வரும் ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்பு தொழிலாளர்கள் போராட்டம் சம்மந்தமாக அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் ஏ. ஐ. டி. யு. சி. சங்கத்தைத் தவிர மற்ற அனைத்துச் சங்கங்களும் இரண்டு ஆண்டுக்கு 15 சத வீதம் சம்பள உயர்வுக்கு இசைவு தெரிவித்திருக்கிறார்கள் என்றும் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாளன்று பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், பவானி ஜமக்காளம் மற்றும் பெட்சீட் தயாரிப்புத் தொழிலாளர்கள் இன்று ஏறி

இருக்கிற விலைவாசி காரணமாக மெஜாரிட்டி சங்கமான ஏ. ஐ. டி. யு. சி. இந்த ஒப்பந்தத்திற்கு மறுப்பு தெரிவித்திருக்கிற போது மீண்டும் கோவையில் இருக்கிற ஸ்பெஷல் டிபுடி கமிஷனர் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தி இதற்கு ஒரு சுமுகமான தீர்வு காண அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஒரு பெரிய சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால், அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்று கருதி, கோவை துணை ஆணையர் இன்றையதினம் பேச்சுவார்த்தை நடத்த எல்லோரையும் அழைத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிசவ பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் குறிப்பிட்ட எதுவும் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிற நிலையிலேயே இதை நான் சார்ந்திருக்கிற காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.